


அக்டோபர் – 2025
(மடல் - 25) செய்தி – 9

***"கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்."***

***சங்கீதம் 122:1***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

# ஆயர் மடல்

**"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கின்ற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக."**

**[யாத்.20:12]**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் பாதுகாத்து பராமரித்து வழிநடத்தி வந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். புதிய மாதத்தைத் ஆண்டவர் நமக்குத் தந்திருக்கிறார், இந்த மாதத்தில் நாம் தனித்திருச்சபையாக, சுதந்திரமாகச் செயல்பட்டு 25வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாட இருக்கிறோம். கடந்த 25 ஆண்டுகளாக ஆண்டவர் நம்முடைய திருச்சபையை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்தி வந்திருக்கிறார், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக நமது திருச்சபையின் வரலாற்றை நினைவு கூர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக வெள்ளி விழா மலர் வெளியிடுகிறோம். இதற்காக ஜெபித்த உழைத்த அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதத்தின் மாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

உறவுகள் ஆண்டவன் நமக்குத் தந்த மிகப்பெரிய பரிசு. இன்பத்தில் இன்புற்றிருக்கவும் துன்பத்தில் தாங்கி பிடிக்கவும் உறவுகள் அவசியம். வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சியில், மனிதன் மனிதர்களோடு உறவாடுவதைக் காட்டிலும் இயந்திரங்களோடு அதிகமாக உறவாடுகிறான். காலத்தின் வேகத்தினால் பல உறவுகளை நாம் இழந்திருக்கின்றோம். கூட்டு குடும்ப வாழ்வை நாம் இழந்து வருகின்றோம். முதுமையை யாரும் விரும்பி வரவேற்பதில்லை. இளமைக்குக் கிடைக்கின்ற வரவேற்பும் அங்கிகாரமும் முதுமைக்குக் கொடுக்கப்படுவதில்லை. குறைந்தபட்சம் அவமானப்படுத்தப் படாமலும், ஒதுக்கப்படாமலும் இருந்தாலே போதுமானது. ஆனால் எத்தனை வீடுகளில் நாம் முதியோர்களுக்கு மரியாதை கொடுக்கின்றோமா?. ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாலூட்டும் பொழுது, தன் அன்பை எல்லாம் திரட்டி ஊட்டி விடுகிறாள். தன் குழந்தையின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்பணிக்கிறாள். இந்த அளவுகடந்த அன்புக்கெல்லாம் அர்த்தமில்லாதக் காலம் ஒன்று வரும், அதுதான் முதுமை.

முதுமையை யாரும் விரும்புவதில்லை முதுமையை நாம் தவிர்க்க இயலாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இயற்கையாகவே முதுமை நம்மை வந்து சேரும். ஆனால் இறைவன் எல்லா மக்களையும் நேசிக்கின்றார் அவரின் அன்புக்கு முன்பாக இளமை என்றோ முதுமை என்றோ வேறுபாடு இல்லை.

**1. மரியாதைக்குரிய முதியோர்கள் கடவுளின் பிரதிநிதி:**

திருமறை முதியோர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. பொதுவாக நாடோடி சமுதாயத்தில் முதியோர்களுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவர்கள் இடம் விட்டு, இடம் நகரும் பொழுது, சுயமாகத் தங்கள் வேலைகளைச் செய்ய இயலாத நிலையிலுள்ள முதியோர்களை அதே இடத்தில் விட்டு விட்டு சென்று விடுவார்கள். ஆனால், இஸ்ரவேல் சமுதாயம் நாடோடி வாழ்க்கை என்றாலும், சமுதாயத்தில் முதியோருக்கு மதிப்பு இருந்தது. சமுதாய அமைப்பில் முதியோர்கள் குலத் தலைவர்களாகக்

கருதப்பட்டார்கள். சமூகத்தில் ஓர தீர்மானம் எடுக்கவும், ஆளுகை செய்யவும், அரசின் பிரதிநிதியாக செயல்படவும், ஊர் வாசலில் நீதி விசாரணை நடத்தவும் முதியோர்கள் மதிப்புடன் நடத்தப்பட்டார்கள். அதோடு முதியோர்கள் கடவுளோடு கொண்டிருந்த உறவும் அவர்களுக்கு மதிப்பையும் மரியாதையும் தரிசனத்தையும், கொடுத்தது. வாக்குத்தத்தையும், முதியோர்கள் உடன்படிக்கையும் கடவுளுடைய பெற்றார்கள். வழிபாடுகளில் பலி செலுத்துவதையும் முதியோர்களே செய்தார்கள். தங்கள் தெய்வத்தைத் தங்களுடைய முன்னோர்களின் பெயரிலேயே ஆபிரகாமின் தேவன், யாக்கோபின் தேவன் என்று அழைத்துக்கொண்டார்கள்.

2. **மரியாதைக்குரிய முதியோரிடம் ஞானமும் அறிவு உண்டு:**

அனுபவம் மிக்க முதியோர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள அநேக காரியங்கள் உண்டு. ஆனால் கற்றுக்கெள்ள நமக்குப் பொறுமை இல்லை. அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளுகின்ற மனநிலையும் நமக்கு இல்லை. வில்லியம் டி போ என்பவர் சொல்கிறார், இளையேரை பக்குவமுடையவர்களாக மாற்றுவதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் முதியோர்கள் என்கின்றார். யோபு செல்கிறார், முதியோரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே என்கிறார். (யோபு 12:12). இன்றைய தலைமுறைகள் முதியவர்களின் ஞானத்தையும் ஆலோசனையையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அது நம் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் இருக்கும்.

**3. மரியாதைக்குரிய முதுமையில் ஆசீர்வாதம் உண்டு**:

இஸ்ரவேல் மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாக ஆண்டவர் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கிறார். அதில் பத்து கற்பனை என்பது மிக மிக முக்கியமானது. முதல் நான்குக் கற்பனைகள் ஒரு மனிதன் கடவுளுக்குச் செய்ய வேண்டிய செயல்களை சுட்டிக்காட்டுகிறது. மீதமுள்ள ஆறு கற்பனைகள் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குச் செய்ய வேண்டிய செயல்களைச் சொல்கிறது. இதிலே, ஒரு மனிதன் ஒரு மனிதனுக்குச் செய்ய வேண்டிய கட்டளைகளில் முதல் கட்டளை (ஐந்தாவது) உன் தகப்பனையும் உன் தாயும் கனம் பண்ணுவாயாக இவ்வாறு கனம் பண்ணினால் அதில் ஆசீர்வாதமும் அடங்கி இருக்கிறது என்று சொல்லுகிறார். உன் வாழ்நாள் நீடித்திருக்கும் என்ற வாக்குறுதியையும் ஆண்டவர் கொடுக்கிறார். வாக்குத்தத்தம் உள்ள ஒரே கற்பனையும் இதுவே.

எனவே மரியாதைக்குரிய முதியோரைக் கனம் பண்ணுவோம், ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

***"கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்." சங்கீதம் 122:1***

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழி நடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதத்தில் நமது ஊாரசஉா யுளைநசளயசல கொண்டாட இருக்கிறோம். 25 ஆண்டுகளை நிறைவு செய்ய ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். இந்த பண்டிகை காலங்கள் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக!

ஆலயம் இறைமக்கள் இறைவனை மகிழ்வோடும், மனப்பூர்வமாக வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் செல்லுகின்ற இடம். ஆன்மாக்கள் இறைவனோடு ஒன்றிணையும் புனிதமான இடத்தை குறிக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் இருக்கும் இடமாகவும் ஆலயம் இருக்கிறது. தாவீது, ***நான் என் ஜீவனுள்ள நாள்ளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே தங்கி இருப்பதே நாடுவேன்*** என்பதன் வழியாக ஆண்டவர் மீது கொண்ட அன்பையும், ஆண்டவரிடத்தில் ஒரு ஆழமான உறவையும் வைத்திருப்பதைக் குறிப்பிடுகிறார்.

இஸ்ரவேல் மக்கள் எருசலேமுக்குச் சென்று தேவனை தொழுதபோது ஏற்பட்ட மகிழ்ச்சியையும், எருசலேமின் அமைதி மற்றும் செழிப்பிற்காக ஜெபிப்பதையும் பற்றிய ஒரு பாடலாக சங்கீதம் 122 இருக்கிறது.

***1. கர்த்தருடைய ஆலயத்தில் மகிழ்ச்சி உண்டு:*** சங்கீதம் 122:1,2

கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து வழிபடுவதை தனது வாழ்க்கையில் தாவீது பெருமகிழ்ச்சியாக கொண்டாடுகிறார். கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிற எல்லோருக்கும் மகிழ்ச்சி உண்டு. அந்த மகிழ்ச்சி இந்த உலகத்தில் மாத்திரம் நின்று விடாமல் நித்தியத்திலும் தொடரும். ஏசாயா 51:11 யூதா 1:24 நாம் கர்த்தரை ஆராதிக்க ஆலயத்திற்கு வரும்பொழுது ஆலயத்தில் நமக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்கிறது.

**2. கர்த்தருடைய ஆலயத்தில் ஐக்கியம் உண்டு:** சங்கீதம் 122:3,4,5

தேவனுடைய ஆலயம் நமக்கும் கடவுளுக்கும், நமக்கும் சக விசுவாசிகளுக்கும் நெருக்கமான உறவையும், தொடர்பையும், ஐக்கியத்தையும், அன்பையும் ஏற்படுத்திக்

கொடுக்கிறது. அனேக பண்பாடு கலாச்சாரம் வேறுபாடு கொண்ட மக்களை ஒன்றிணைத்து நாமக்குள் ஐக்கியத்தை ஆண்டவரின் ஆலயம் கொடுக்கிறது. ***எருசலேம் இசை வினைப்பான நகரமாய் கட்டப்பட்டிருக்கிறது என்று தாவீது எழுதுகிறார்.*** தேவனுடைய ஆலயத்தில் தேவன் செய்த நன்மைகளை எல்லா மக்களோடும் சாட்சியாக அறிவிக்கும் போது மற்ற விசுவாசிகளின் விசுவாசமும் உறுதிபடுகிறது.

**3. கர்த்தருடைய ஆலயத்தில் சமாதானம் உண்டு: சங்கீதம் 122:6-9**

தேவனுடைய ஆலயத்திலே தேவ சமாதானத்தைக் கட்டளையிடுகிறார். உலக வாழ்வில் பல பிரச்சனைகளைச் சந்திக்கிறோம். தேவ சமூகத்தில் வந்து கர்த்தரை ஆராதிக்கும் போது அவர் சமாதானத்தைத் தருகிறார். சமாதனனம் ஆண்டவர் கொடுக்கின்ற பரிசு. உலகம் கொடுக்கமுடியாத சமாதானத்தை ஆண்டவர் கொடுக்கிறார். ஆலயத்தின் வழியாக சமாதானத்தை தமது வாழ்வில் அனுபவித்த சங்கீதக்காரன் ஆலயத்தை நிமித்தம் அங்கு வருகிற அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக என்கிறான்.


***4. கர்த்தருடைய ஆலயத்தில் நன்மை உண்டு:***

தாவீது தன்னுடைய குமாரனாகிய சாலமோனிடம் சொல்லுகிறார். "இப்போதும் என் குமாரனே நீ, பாக்கியவானாயிருந்து கர்த்தர் உன்னைக்குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி அவர் உன்னுடனே கூட இருப்பாராக". 1நாளாகமம் 22:11 கர்த்தருக்கு ஆலயத்தை கட்ட வேண்டும் என்கின்ற தரிசனத்தை தன் மகனோடு பகிர்ந்துகொள்கிறான். தாவீது ஆலயத்துக்கு தேவையான அனைத்து பொருட்களையும் சேகரித்து வைக்கிறான். ஏனெனில் ஆலயத்தை நேசித்தால் ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது தாவீதுக்கு நன்றாகத் தெரியும். எனவே மக்களையும் உற்சாகப்படுத்துகிறார். இஸ்ரவேல் மக்களும் கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு மனப்பூர்வமாகவும் உற்சாகமாகவும் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். நாம் ஆண்டவருக்கென்று கொடுப்பதால் நமது அடுத்த தலைமுறைக்கும் ஆண்டவருக்கும் ஆலயத்துக்கும் முன்னுரிமை கொடுப்பதைக் கற்றுக்கொடுக்கிறோம்.

ஆண்டவரையும் அவரின் ஆலயத்தையும் நேசிப்போம் ஆண்டவர் கொடுக்கின்ற மகிழ்வு, சமாதானம் மனநிறைவு ஆசீர்வாதம் அனைத்தையும் பெற்றுக்கொள்வோம் ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

மீட்பரின் பணியில்
***திருமதி.ஜெபா சாமுவேல்***

## முதியோரின் ஆசீர்வாதம்



குழந்தையாய் இம்மண்ணில் பிறந்த மனிதன், குழந்தைப் பருவம், இளமைப் பருவம் ஆகியவற்றை கடந்து இறுதியில் முதுமை பருவத்தை அடைகிறான். இதை யாராலும் தவிர்க்க முடியாது. இப்பருவத்தைடைய மனிதன் விரும்புவதில்லை. இப்பருவம் ஒருவேளை தனிமையையும், பலவீனத்தையும் கொண்டு வரக்கூடியதாய் இருந்தாலும், வேதாகமத்தின்படி முதுமையானது ஒரு சுமையல்ல. மாறாக அது ஒரு ஆசீர்வாதமாகும். வேதத்தில் முதியோரின் சொல் கேட்டு ஆசீர்வாதம் அடைந்தவரையும், கேளாது ஆசீர்வாதத்தை இழந்தவரையும் குறித்து சற்று சிந்திப்போம்.

**மாமனின் சொற்கேட்டு பயனடைந்த மோசே**

மோசேயின் மனைவியையும் அவன் குமாரன் இருவரையும் கூட்டிக்கொண்டு, மோசேயின் மாமன் எத்திரோ அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்தான் (யாத்.18).

தன் மாமனாரை மரியாதையுடன் உபசரித்த மோசே கர்த்தர் இஸ்ரவேல் மக்களை அதிசயமாய் வழிநடத்தியதை விவரித்து சொன்னான். அதைக் கேட்ட எத்திரோ கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் தேவனுக்கு கொண்டு வந்து செலுத்தி, பின்பு ஆரோனும் மோசேயும் எத்திரோவோடு சேர்ந்து தேவசமூகத்தில் போஜனம் பண்ணினார்கள். எத்திரோவின் இந்த செயல் முதிர்வயதிலும் கர்த்தரோடு எத்தகைய ஐக்கியம் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகிறது.

மறுநாள் மோசே ஜனங்களை காலமே துவங்கி சாயங்காலமட்டும் நியாயம் விசாரித்தார். இப்படி ஜனங்கள் எல்லாரும் ஒருவராய் உட்கார்ந்து நியாயம் விசாரிக்கும் மோசே முன்பு இருப்பதைக் கண்ட எத்திரோ அவருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும். அவர்கள் எப்பொழுதும் ஜனங்களை நியாயம்விசாரித்து, பெரிய காரியங்கள் யாவையும் உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்;



இப்படி அவர்கள் உம்மோடேகூட இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும். இதன் மூலம் உம்முடைய பாரம் குறையும் என்று அறிவுறுத்தினார். இந்த ஆலோசனையை மோசே முழுவதுமாக ஏற்றுக் கொண்டு, அவன் சொன்னபடியெல்லாம் செய்தான். நியமிக்கப்பட்ட அதிபதிகள் தங்கள் பணியை செவ்வனே செய்தனர். மோசேயின் பாரமும் குறைந்தது. மோசேயின் மாமன் எத்திரோ நிச்சயமாய் மகிழ்ச்சி அடைந்திருப்பார். நிம்மதி பெருமூச்சுடன் தன் தேசத்துக்கு திரும்பி போனார்.

- எத்திரோ கர்த்தரோடு ஐக்கியம் கொண்டிருந்த காரணத்தால் தகுந்த ஆலோசனையை அவரால் மோசேக்கு அளிக்க முடிந்தது. இஸ்ரவேல் மக்களை வழிநடத்திக் கொண்டிருந்த மோசேக்கு உதவியாக அவருடைய குடும்பத்தை பொறுப்புடன் கவனித்துக் கொண்டார். மோசேயின் ஊழியப்பாதையில் மறைமுகமாக எத்திரோ உதவி செய்து வந்தார் என்றே கூறலாம். மொத்தத்தில் எல்லா வகையிலும் மோசேயின் பாரத்தை குறைக்க திறமையாக உதவினார்.

- மோசேயின் முழுமையான கீழ்ப்படிதல் அவருடைய தாழ்மையக் காட்டுகிறது. தன்னுடன் கர்த்தர் நேரிடையாக பேசுவதால் தனக்கு எல்லாம் தெரியும் என்றோ, இத்தனை நாட்கள் இவ்வளவு பெரிய கூட்டத்தை நடத்தி வந்த எனக்கு உம்முடைய ஆலோசனை தேவையில்லையென்றோ கூறாது அப்படியே அதை ஏற்றுக்கொண்டார். அதன் மூலம் அதின் பலனைக் கண்டார். இறுதிவரை தேவனோடு சரியான உறவு கொண்டிருந்தார். 120 வயது வரை அவரின் கண்கள் மங்கவுமில்லை. அவருடைய பலம் குறையவுமில்லை. எத்தனை பாக்கியம் அது. எல்லாவற்றிற்கும் மேலாக தூரத்திலே மட்டும் கானானைக் கண்டாலும், ஒருவரும் அறியாத கல்லறையில் கர்த்தரால் அடக்கம்பண்ணப்பட்டார்.

- ரெகோபெயாமோ முதியோரின் ஆலோசனையை விட்டுவிட்டு இளையோரின் வார்த்தை கேட்டான். அதினால் ராஜ்யபாரம், இஸ்ரவேல், யூதா என்று பிளவுபட்டது (1 ராஜாக. 12:6-15).
- சவுல் சாமுவேலின் வார்த்தைக்கு கீழ்ப்படையாமல் தன்னிச்சை செய்தான் (1 சாமு. 15:22,23). அதினால் ராஜ்யத்தை இழந்தான்.

ரெகோபெயாம், சவுலை போல கர்த்தர் நம்மை அழைத்த அழைப்பை இழந்துவிடாது, மோசேயைப் போல பூரணமாய் அழைப்பை நிறைவேற்ற, தாழ்மையுடன் நம் பெற்றோரையும் முதியவரையும் மதித்து நடக்க கர்த்தர் நமக்கு அருள்புரிவாராக!

**ஜெபசீலி ஆசீர்**

## வேதாகமப் பெண்கள்

### "அன்னாள்"

இளமையில் ஊழியம் செய்வது இனிமையானதும் எளிமையானதும்தான். ஆனால் இளமை ஒடுங்கி, நலன் குறைந்து, வாழ்வின் பிடிப்புகளும் அகலும்போது ஆண்டவருக்கு சேவை செய்ய முடியுமா? முடியும் என்பதை 84 வயதுள்ள அன்னாள் மூலம் தெரிந்து கொள்ளலாம் [லூக்கா 2:21-24].

அன்னாள் என்ற பெயரின் அர்த்தம் "கர்த்தரின் கிருபை" என்பதாகும். ஆசேருடைய கோத்திரத்தாள். பானுவேலின் குமாரத்தி கன்னி பருவத்தில் விவாகம் பண்ணி ஏழு வருடம் புருஷனுடனே வாழ்ந்து கைம்பெண்ணானவள். தீர்க்கதரிசினி. இயேசுகிறிஸ்து பிறந்து, நியாயப்பிரமானத்தின் நியமங்களை நிறைவேற்ற எருசலேம் தேவாலயத்திற்கு அவரைக் கொண்டு வந்தார்கள். அப்போது இந்த அன்னாள் அவரை சந்தித்தாள். இயேசுவைக் கண்ட மாத்திரத்தில் கர்த்தரை புகழ்ந்து அவரைக் குறித்து பேசினாள்.

**1. தேவப்பிரசன்னத்தை விட்டு நீங்காத விதவை:**

நாம் அநேக நேரங்களில் தேவ பிரசன்னத்தில் வந்து போகும் ஒரு நபராக மட்டுமே இருக்கிறோம். ஒரு சிலர் மாத்திரமே நிரந்தரமாக தங்குகிறார்கள். இந்த அன்னாள் தள்ளாடும் வயதிலும் (84) தேவாலயத்தை விட்டு நீங்கவில்லை. தேவாலயம் தேவன் தங்கும் இடம். இஸ்ரவேல் மக்களின் வாழ்வு முறைகள் தேவாலயத்தை சுற்றியே இருந்தது. இந்த அன்னாள் வாழ்வில் பல சந்தர்ப்பங்களை இழந்தவள். இளமையையும், பெலனையும் கடந்தவள். இருப்பினும் தேவ பிரசன்னத்தை இழந்து போக விரும்பவில்லை. தேவாலயம், தேவ பிரசன்னம், அவளுக்கு போதுமானதாக இருந்தது.

**2, உபவாசமும் ஜெபமும்:**

ஜெபம் நம் வாழ்வில் முக்கியமான ஒன்று. ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு என்பார்கள். பெண்களாகிய நாம் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு ஜெபிக்க செல்லும்போது தூக்கம் வந்துவிடுகிறது. அதை நாம் overcome பண்ணவேண்டும். இயேசுகிறிஸ்து ஜெபத்திற்கு உதாரணம். இங்கு அன்னாள் இரவும் பகலும் ஜெபித்தாள் என பார்க்கிறோம். ஸ்தோத்திரம் பண்ணி ஜெபிப்போம்.

**3. ஆராதனை வீராங்கனை:**

நம்மில் அநேகர் ஜெபிப்போம். ஆனால் ஆண்டவரை நினைத்து, புகழ்ந்து, துதிக்க மறந்து விடுகிறோம். தேவனை சேவிப்பதில் ஆராதனை முக்கியமானதாக

காணப்படுகிறது. அன்னாள் இரவும் பகலும் தேவனை ஆராதித்தாள். அவள் தேவ பிரசன்னத்தை விட்டு நீங்காமல் இருந்ததால் இரவும் பகவும் ஆராதனை செய்வது அவளுக்கு எளிதாக இருந்தது.

**4. எருசலேமில் மீட்புண்டாக காத்திருந்தாள்:**
பாவத்திலிருந்தும், பாவத்தின் பிடிகளிலிருந்தும் அதன் தண்டனைகளிலிருந்தும், மானிடத்தை மீட்கும்படியான தேவதிட்டத்தை இயேசுகிறிஸ்துவிலே தேவன் வைத்திருந்தார். யூதர்களின் மைய இடம் எருசலேம். தேவனது மீட்பின் திட்டமானது பல வழிகளில் அந்நாட்களில் தீர்க்கர் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அநேகர் மேசியா வந்து தங்களை ரோமரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார் என நம்பினாள். ஆனால் தேவனை ஆராதிக்கிறவர்களும், ஜெபிப்பவர்களும் தான் தேவனுடைய திட்டத்தை சரிவர புரிந்துக் கொள்வார்கள். அப்படி புரிந்து கொண்டவள் தான் இந்த அன்னாள்.

**5. சாட்சியின் ஊழியம்:**
தான் அறிந்த, அனுபவித்த மீட்பின் நற்செய்தியை, அதை அறிய ஆவலாய் இருந்தவர்களுக்கு அறிவித்தாள். நாம் ஒவ்வொருவரும் மீட்பின் அனுபவத்தை பெற்றிருக்கிறோம். ஆனால் மற்றவர்களுக்கு சொல்ல தயங்குகிறோம். சுவிசேஷத்தை அறிவிக்க ஆட்கள் தேவை. இருக்கிற இடங்களிலே, வேலைப் பார்க்கும் இடங்களிலே சமயம் கிடைக்கும்போது இயேசுகிறிஸ்துவைப் பற்றி சாட்சியாக கூறுவோம். நாமும் சாட்சியாக வாழ்வோம்.

ஜெபிப்பதிலும், உபவாசிப்பதிலும், ஆராதனை செய்வதிலும், சாட்சியின் வாழ்க்கை வாழ்ந்து காட்டுவோம்!

**ஷர்மிளா ராஜேஷ்**

Dear Children,

The theme this October is "**OLD AGE**".

Caring for the Aged means showing love, respect, and kindness for older people, just like we would want someone to help us when we are old.

Sometimes they may walk slowly, forget things, or feel lonely — and God calls us to be kind and considerate of them. We can show care by listening to their stories, helping with chores, visiting them, or simply giving them a smile.




## WHY WE SHOULD CARE...?



1. **God values the elderly** - The Bible says 📖 "Stand up in the presence of the aged, show respect for the elderly and revere your God." (Leviticus 19:32)

2. **Older people are wise** - The Bible often shows older people giving good advice. Their gray hair is called a 📖 "crown of glory" (Proverbs 16:31).




3. **Families should take care of them** - Jesus taught that 📖 children should honor their father and mother (Matthew 15:4). This includes helping parents and grandparents when they grow old


4. **Serving them is serving Jesus** - Jesus said that 📖 when we care for people in need, we are caring for Him (Matthew 25:40).

**PRAYER** - **"Ears to listen" "Words that care"**
**"Hands to help" "And a prayer to share"**
**"When they're weak, I'll walk beside"**
**"When they're tired, I'll sit nearby"**
**"Jesus loves them, so will I—"**
**"That's how I care, that's how I try!"**

# SAYING IT WITH PICTURES…




Sons are a heritage from the LORD, children a reward from him. Like arrows in the hands of a warrior are sons born in one's youth. Blessed is the man whose quiver is full of them.
— Psalm 127:3–5 NIV




He decreed statutes for Jacob and established the law in Israel, which he commanded our forefathers to teach their children, so the next generation would know them, even the children yet to be born, and they in turn would tell their children.
— Psalm 78:5–6 NIV

# NAMES OF GOD #9 JEHOVAH SABAOTH

## JEHOVAH SABAOTH – THE LORD OF HOSTS




Jehovah Sabaoth, the Lord of Hosts, is a name that emphasizes the power and might of our God. He rules over the vast multitudes of angels and stars and armies.

The mighty Lord of Hosts hears Hannah's prayer. She gives birth to a son—Samuel. Samuel grew up to be a great spiritual leader in Israel.

Isaiah specifically identifies the Lord of Hosts as our Redeemer. "Our Redeemer, the Lord of hosts is His name, the Holy One of Israel (Isaiah 47:4)

Because of His powerful victory over sin in our behalf, the name of Jesus is above every name (Philippines 2:10)

### Safe in the Storm



Grandma held little Anna's hand as thunder rumbled outside. She smiled and said, "Jehovah Sabaoth, the Lord of Heaven's armies, keeps us safe."

Anna snuggled closer, no longer afraid of the storm.

## TINY TOTS SECTION

COLOR IN…





# JESUS CAME FOR ALL OF US

## Bread from Heaven

Some people did not understand Jesus. How could He be bread that came from heaven ?

Count the ? 's in the picture below. 4 or 5 ?





Jesus was sent from God as living bread.

Trace the letters.





Jesus told them about manna sent from God. God also sent His Son Jesus.

Match the shapes.




Jesus gave His life so the world could have life.

Shade the shapes with a ♡.



# Find It!

This Primary invited the grandparents in their branch to an activity! Find the hidden objects.
Bonus: How many hidden cookies can you find? (They can be different colors.)



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "OLD AGE"

1. Who in the Bible is called "full of years" when he died in old age? (Gen. 25:8)

a. Moses b. Abraham
c. David d. Solomon

2. Who said, "I am this day eighty-five years old… I am still as strong"? (Jos. 14:11)

a. Jacob b. Moses
c. Caleb d. Joshua

3. Who was the very old prophetess that met baby Jesus in the temple? (Lk. 2:36)

a. Miriam b. Deborah
c. Anna d. Elizabeth

4. When did Moses die, with eyes - not dim, nor his strength gone? ( Deut. 34:7)

a. 80 years b. 100 years
c. 120 years d. 150 years

5. Who was blessed with a son, Isaac, in their old age?

a. Noah and his wife b. Abraham and Sarah
c. Elkanah and Hannah d. Mary and Joseph

6. What does Leviticus say we should do before the gray-headed? (Lev. 19:32)

a. Teach them. b. Stand up in honor.
c. Keep silent. d. Keep them gifts.

7. According to Job, with the aged comes what? (Job. 12:12)

a. Riches b. Respect
c. Wisdom d. Peace

8. Paul instructed Timothy to treat older men as what? (1 Tim. 5:1)

a. Strangers b. Fathers.
c. Masters. d. Teachers.

9. According to Proverbs, who should we listen to? (Prov. 23:22)

a. Friends b. Kings
c. Elders d. Teachers

10. Who are called to teach younger women to be reverent and wise? (Titus 2:3- 6)

a. Angels b. Older women
c. Priest d. Prophets

11. According to Proverbs, who is a crown to the Aged? (Prov. 17:6)

a. Grandchildren b. Parents
c. Grandparents d. Relatives

12. How many years does a person live for, according to the Psalmist? (Ps. 90:10)

a. 30 – 40yrs. b. 50 – 60yrs c. 70 – 80yrs. d. 90 – 100yrs.

## THE WORN-OUT CHAIR

Daniel loved hanging out with his friends after school.

His grandfather, however, often sat quietly in the corner of their living room on an old worn out chair, reading his Bible.




One evening, as Daniel rushed to leave, his grandfather called, "Sit with me for just ten minutes." Reluctantly, Daniel stayed.

His voice trembled, but his eyes shone with wisdom. "Daniel," he said softly, "youth is like running fast, but old age is like knowing the right road to run on."

A week later, Daniel faced peer pressure to cheat in a test. His grandfather's words came back like a whisper: "Know the right road." Daniel refused to cheat, even though it cost him some friends.

That night, Daniel hugged his grandfather and said, "I get it now. Your stories are not old—they're treasure."

He discovered what Proverbs 16:31 meant: "Gray hair is a crown of glory; it is gained in a righteous life."

## GLADYS AYLWARD – FAITHFUL IN OLD AGE

Even in her 60s and 70s, missionary Gladys Aylward refused to retire.

Though frail, she kept caring for orphans, teaching the Bible, and encouraging believers in China.



She once said, "I have only one great desire: to live my life close to Jesus."

Her life showed that old age is not the end of usefulness, but a time to shine even brighter for Christ.

# FamilySearch Sleuth

By Olivia Corey



Sam wants to finish filling out some FamilySearch records, but he doesn't know what information goes where. Use the clues below to help him solve the puzzle. Mark each box with √ for true and O for false to match each person to his or her place and date of birth. See answers on page 48.

1. Andrew Smith was not born in Delaware.
2. The person with a birthday in 1776 was born in New York.
3. The person who was born in England was born in 1690.
4. Lillian Jane Pierce was not born in England or New York.
5. Samuel T. Evans, who was born in England, was not born in 1776.

| | Delaware | New York | England | December 2, 1690 | July 24, 1720 | January 31, 1776 |
|---|---|---|---|---|---|---|
| Andrew Smith | | | | | | |
| Lillian Jane Pierce | | | | | | |
| Samuel T. Evans | | | | | | |

Full Name: Andrew Smith
Date of Birth: ____________
Place: ____________

Full Name: Lillian Jane Pierce
Date of Birth: ____________
Place: ____________

Full Name: Samuel T. Evans
Date of Birth: ____________
Place: ____________

# Find It!

Maria and Daniel from the Philippines like helping their *lola* (grandmother). Today they took turns pushing her wheelchair through the park while she told them about the missionary who baptized her.
See if you can find nine things below that Maria and Daniel might use on a mission someday.






# MISSIONARY JOURNEY

## APOSTLE # 9 JAMES, THE SON OF ALPHEUS



James was one of the twelve apostles of Jesus Christ.

Other than being listed as a disciple, nothing else is known about James the son of Alphaeus.




James the son of Alphaeus reminds us that God uses a different set of standards to choose His heroes. He honors faithfulness, endurance, obedience and sacrifice.

While some apostles wrote books of the Bible and others were featured regularly in the gospels, it appears that James the son of Alphaeus was quietly faithful to his Lord. For that, he will be equally honored with them for all eternity.

Tradition implies that it was James the Less who may have taken the gospel to Persia (modern Iran) and was martyred there.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of October is: ______________________________.
2. Why should we care for the Aged?

   a. __________________________; c. __________________________________

   b. __________________________; d. __________________________________

3. JEHOVAH SABAOTH means "_________________________________________."
4. ______________________was a missionary to China who worked till her 70s.

Children, let us pray –

"Dear Jesus, help us to be kind and caring to the elderly around us. At this moment, we remember our grandparents, watch over them. Amen."

God bless,

**Mrs. Briliya Jeyaseelan**.

## Answers to September Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – "Good Teacher"

1. a. Rabbi
2. c. Inherit eternal life
3. a. Through parables and stories
4. c. He taught with authority.
5. c. To love your neighbor as yourself
6. c. Love them and pray for them
7. b. Rabbi
8. b. Word of God.
9. c. 99
10. b. Rock
11. d. How to serve others
12. d. 10

## Complete the Short Review Below…

5. The theme for the month of September is: **Good Teacher**.
6. How is Jesus the Good Teacher **- He shows you the right way to live your life.**
7. EL DEAH means "_ **THE GOD OF KNOWLEDGE** _."
8. **Mary Slessor** was a missionary to Nigeria in the 1800s.
9. Ps. 119:9 says – "**How can a young person stay on the path of purity? By living according to your word "**
10. Thomas was commonly called **Doubting Thomas**.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. முதியோரிடத்திலும் வயது சென்றவர்களிடத்திலும் என்ன இருக்கும்?
2. முதியோருக்குக் கிரீடம் யார்?
3. முதியோர் மொழி எது?
4. ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும் எது?
5. முதிர்வயது வரைக்கும் உள்ள வாக்குத்தத்தம் எது?
6. முதிர் வயதானவர்களின் மகிமை என்ன?
7. முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன் - எதனால்?
8. முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு கடினமான உத்தரவு கொடுத்தது யார்?
9. யார் தீர்க்காயுசைப் பெறுவான்?
10. நல்ல நரைவயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்தது யார்?
11. தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுமுள்ளவனாய் நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தது யார்?
12. தீர்க்காயுசுள்ளவனாய் முதிர் வயதிலே மரித்தது யார்?
13. முதிர்வயதுள்ளவன் இயேசு கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டவன் யார்?
14. நூறு வயதுசென்று மரிக்கிறவன் யாரென்று எண்ணப்படுவான்
15. ஜீவனும் தீர்க்காயுசுமானவர் யார்?

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | • எல்சபாத்<br>• மத்தனீயா<br>• புஷ்பராகம் | 1 நாளா. 12 : 12<br>1 நாளா. 25:16<br>வெளி. 21:19 |
| 2 | யூதா, சிமியோன் | யோசுவா 21:10,16 |
| 3 | எசேக்கியேல் 28:13 | எசேக்கியேல் 28:13 |
| 4 | ஆவியின் கனி | கலாத்தியர் 5: 22,23 |
| 5 | சங்கீதம் 8, 20, 28, 47, 52, 98, 99, 122, 137, 149 | |
| 6 | அபியேசர் என்னும் ஆனதோத்தான் | 1 நாளா. 27:12 |
| 7 | ஜெபவேளை | அப். 3:1 |
| 8 | ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்<br>தேவதூதன் தன்னிடத்தில் வருவதை தரிசனமாக் கொர்நேலியு கண்ட நேரம் | அப். 3:1<br>அப். 10:3 |
| 9 | அபீதான் | எண்ணாகமம் 7:60 |
| 10 | கிஸ்லே | சகரியா 7:1 |
| 11 | குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் | எரேமியா 36:22 |
| 12 | யூதா பென்யமீன் கோத்திரத்தார் எல்லாரும் மூன்றுநாளைக்குள்ளே எருசலேமிலே கூடினார்கள். | எஸ்றா 10:9 |
| 13 | ஓசெயா | 2 ராஜா.17:1 |
| 14 | பழைய பலனை | லேவியராகமம் 25:22 |
| 15 | சமாரியா | 2 இராஜா. 18:10 |

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Blessy Lipny
3. Mrs.Desigta Jaison
4. Mr.Emmanuel
5. Mrs.Esther Pauline Rani
6. Mrs.Febell Jeevagi Thomas
7. Mrs.Geetha kannan
8. Mrs.Helen Sharmila Ray
9. Mrs.Hame RajaGuru
10. Mr.Jeba Jino
11. Mrs.Jasmine Sobha
12. Mrs.Jebaseeli Asir
13. Mrs.Jenila Gannraj.L
14. Mrs.Kishi Maher
15. Mrs. Malar Ernast
16. Mrs.Manuel Sarah
17. Mrs.Nandhini Rajkumar
18. Mrs.Padma Brin
19. Mrs.Peppin Jenson
20. Mrs.Persis John
21. Mr.Prawin Durai Sam
22. Mrs.Priya Ranjith Kumar
23. Mrs.Praveena Arun
24. Mr.Raja Guru
25. Mr.Ramesh Soundara Rajan
26. Mr.Salin Robert
27. Mrs.Selvi George
28. Mrs. Shobana Milton
29. Mrs.Sheeba Merlin
30. Mrs.Sheeba Herlin
31. Mrs.Sheneegah Stanly
32. Mrs.Sharmila Rajesh
33. Mrs. Shajeethe Gracy
34. Mrs. Subija Jino
35. Mrs. Suni Smila Edwin
36. Mrs.Sweetilin Frank
37. Mrs.Valentine Sharmila Paul
38. Mrs. Vithya Dinesh

## Children who answered October – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Brightson Timothy Raj
4. Benson Immanuel Raj
5. Camryn Robert.S
6. Clement Dave
7. Daniel Vanya (Ruwais)
8. Danion Lemuel
9. Diyas Dinesh
10. Dafina Dinesh
11. Darion Lemuel
12. Evelyn Gracia
13. Evelyn Loria V
14. Evaniya Sherin
15. Evangelia Sharon
16. Efrona
17. Effrin
18. Gabrilyn Hannah
19. Galvin Robert.S
20. Giana Elin
21. Hadriel Adventier
22. Janey Titus
23. Jaslin Shanna
24. Jaylan Paul Jino
25. Joanna Paul Jino
26. Johanan Paul Jino
27. Jessica Eban
28. Jevlyn Ana
29. Jeya Jehosheba Maher
30. Jim Scott
31. Jen Scudd
32. Jeffrey Samuel
33. Jenessa Johnson
34. Joel Abrakam
35. Joha Anit Manuel
36. Johan Sam Manuel
37. Liana Erin
38. Leona Juliet
39. Leonel I.J. Stalin
40. Linuel I.J. Sherwyn
41. Mishael Wesley (Ruwais)
42. Pristina samlynPrince
43. Rivqah Deby Rajkumar
44. Sherlyn Sana
45. Sam Jesvin Vincent
46. Starlyne Mobile
47. Steffi Priscilla .R
48. SelvaJesvin (Ruwais )
49. Yedidiah Arun (Ruwais)
50. Yovaan jairus (Ruwais)



# இயேசுவின் சீடர் தோமா

***இந்தியாவின் அப்போஸ்தலர்***

**உயிரோடு எழும்பிய பெண்ணின் குரல்**

ஆண்களும் பெண்களுமாக எண்ணிக்கைக்கு அடங்காத திரளான ஜனங்கள் அக்கினியில் எரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பரிதாபமான கதறுதலின் ஓலங்கள் கேட்டுக்கொண்டே இருந்தது. அந்த பயங்கரமான அக்கினியிலும் வேகாத பலவிதமான புழுக்கள் அவர்களை ஓயாமல் கடித்துக்கொண்டே இருந்ததோடு அவர்களுக்கு சொல்லாண்ணாத வேதனையைக் கொடுத்துக் கொண்டே இருந்தன. பயங்கரமான இருள் நிறைந்த அந்த இடத்திலிருந்து அவர்களை காப்பாற்ற யாரும் இல்லை. அங்கே துடித்துக் கொண்டிருந்த அந்த மக்கள் அனைவரும் கதறி ஓலமிட்டதோடு, வேதனைகளைத் தாங்க முடியாமல் தங்கள் பற்களை கடித்த வண்ணமாகவே இருந்தனர்.

என்னை அங்கு அழைத்துச் சென்றவனைப் போன்ற தோற்றத்தை உடைய பயங்கரமான உருவத்தைக் கொண்ட பலர், அந்த நரகக் குழியில் இருந்த ஒவ்வொருவரது சரீரத்தையும் பல விதங்களில் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். என்னை அழைத்துச் சென்ற அந்தக் கொடூரன், அங்கே வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களைக் காண்பித்து, என்னைப் போன்று விபச்சாரம் செய்தவர்களுடைய ஆத்துமாக்கள், கொலை செய்தவர்கள், ‘நாகரீகம்!’ என்கிற பெயரில் வெட்கமில்லாமல், அரை குறை ஆடையணிந்து மற்றவர்களை பாவம் செய்யத் தூண்டியவர்கள் போன்ற பலவிதமான பாவஞ்களைச் செய்தவர்கள் அங்கே துன்பத்தை அனுபவிப்பதாக கூறினான்.

கொளுந்து விட்டு எரிகிற அக்கினி ஜுவாலையில் இருந்து தப்பி வெளியே

வரமுடியாத சூழ்நிலைதான் அங்கே இருந்தது.

அந்தக் கொடூரன் என்னை நோக்கி, "இங்குள்ள ஆத்துமாக்கள் ஒவ்வொன்றிற்கும் இதுதான் சிறை! பூமியில் அவர்கள் செய்த பாவத்திற்கான தண்டனையை தற்போது இங்கே அனுபவிக்கின்றனர்" என்று விளக்கி கூறினான். அங்கு துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள், அக்கினி ஜுவாலை எரிகிற அந்தக் குழியில் என்னை தள்ளி விடுமாறு அவனிடம் முறையிட்டனர். அப்பொழுது, திடீரென அங்கு தோன்றிய உம்மைப் போன்ற பிரகாசமான தோற்றமுடைய ஒருவர் (இயேசு கிறிஸ்து) அவனுடைய கையிலிருந்து என்னை விடுவித்து, இங்கு அழைத்து வந்தார் என்றாள்.

அதைக் கேட்ட தோமா, அங்கு கூடியிருந்த திரளான ஜனங்களை நோக்கி, "இந்தப் பெண் கூறியதை கேட்டீர்களல்லவா? நீங்களும் உங்களுடைய பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி, பாவம் செய்வதை விட்டு விட்டு, நான் பிரசங்கிக்கிற இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு ம்னந்திரும்பாவிட்டால், நித்திய நித்தியமாக நரகத்தில் தண்டனை அனுபவிக்க வேண்டிய பரிதாபமான நிலைதான் உங்களுக்கும் வரும்.

எனவே, உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கல். அவர் உங்களுடைய பாவங்களை எல்லாம் கழுவி, தம்முடைய பரிசுத்த வல்லமையினால் உங்களை சுத்தப்படுத்துவார். உங்களுடைய பழைய வாழ்க்கையில் இருந்த, பொய் சொல்லுதல், மது அருந்துதல், தீமைக்கு தீமை செய்தல், நான் பிரசங்கிக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத பாவ காரியங்களைச் செய்தல்' போன்றவற்றை விட்டு விட்டு, சாந்த குணம் உள்ளவர்களாகவும், பரிசுத்தம் உள்ளவர்களாகவும் மாறி, கர்த்தர் மீது உங்கள் விசுவாசத்தை வையுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய பிள்ளைகளாக மாற்றுவார். விசேஷமாக ஆவிக்குரிய வரங்களையும் அவரிடத்திலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்" என்று சொல்லி, அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார்.

அதைக் கேட்ட ஜனங்களில் அனேகர், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, தங்களை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தனர். மீண்டும் எழுந்த அந்தப் பெண்ணும் மனந்திரும்பினாள். கர்த்தர் அவர்கள் அனைவரையும் உலகம் தர முடியாத சந்தோஷத்தினால் நிரப்பினார். பின்பு, ஜனங்கள் அனைவரும் உயிருடன் எழுந்த அந்த பெண்ணுக்கு தங்களால் இயன்ற பண உதவிகளை செய்து, அவளுடைய வாழ்வாதாரத்திற்கு உதவி செய்தார்கள்.

மட்டுமல்ல, அந்தப் பட்டணத்தின் ஜனங்களைத் தொடர்ந்து தோமா சத்தியத்தில் வழி நடத்தி வந்தார். இயேசு கிறிஸ்து அவர்களுக்காகவும் இவ்வுலகிற்கு வந்ததையும், சிலுவையில் மரித்ததையும், மூன்றாம் நாள் உயிரோடெழுந்ததையும், மீண்டும் இராஜாதி இராஜாவாக இந்த உலகிற்குத் திரும்ப வரப் போகிற அவரது இரண்டாம் வருகையைக் குறித்தும் தெளிவாக அவர்களுக்குப் போதித்தார். அதோடு கூட இயேசு கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததையும் அவர்களுக்கு எடுத்து சொல்லி, "**இயேசுவே தெய்வம்**!" என்று பறை சாற்றினார்.

- **தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை

**தூய்மை பெற நாடு [பாமாலை 306]**
**(Take time to be holy)**

**1. தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே**
**நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே;**
**கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்,**
**யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்.**



**2. தூய்மை பெற நாடு; லோகக் கோஷ்டத்தில்**
**தனித்திரு நாளும் அவர் பாதத்தில்**
**யேசுவைப் போலாவாய் நோக்கின் அவரை**
**பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.**

***'நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்'. லேவி 20 : 7***

நமதுவாழ்க்கை எப்போதும் நெருக்கடியான அலுவல்கள் நிறைந்தது. காலையில் படுக்கையிலிருந்து எழுந்தபின், ஒன்றன்பின் ஒன்றாக அவசரநிலை உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. தாயார் உணவு தயாரிப்பதிலும், தந்தை தன் அலுவலகத்துக்குத் தேவையான காரியங்களை கவனிப்பதிலும் பிள்ளைகள் பள்ளிப்பாடங்களைப் படிப்பதிலும் அவசரமாக ஈடுபட்டிருக்கின்றனர். இவ்விதமான நெருக்கடியான நிலைமைகள் நாள் முழுவதும், இரவில் படுக்கைக்குச் செல்லும் வரையிலும் நம்மை நெருக்குகின்றன. இதற்கிடையில் பரிசுத்த பிதாவுடன் தரித்திருந்து, நம்மை பரிசுத்தப்படுத்திக் கொள்ள நாம் நேரம் செலவிடுவதில்லை. ஆடை அலங்காரங்கள் செய்வதிலும், நம்முடைய நண்பர்களுடன் உறவாடுவதிலும், பலவிதமான கேளிக்கை மற்றும் விளையாட்டு அரங்கங்களிலும் நாம் எவ்வளவோ நேரத்தை செலவிடுகிறோம். ஆனால் ஆண்டவருடன் தரித்திருந்து, அவரைப் போலப் பரிசுத்தம் அடைவதற்காக நாம் செலவிடும் நேரம் எவ்வளவு என்பதை சிந்தித்துப் பார்ப்போமாக. ஒருவேளை, அவசரமாக திருமறையைத் தட்டித் திறந்து, கண்ணில்படுகிற ஒரு வசனத்தை வாசித்து, அரை நிமிடத்தில் ஒரு ஜெபத்தைச் சொல்லிக் கடமையை முடிக்கவில்லையா? தானியேல் தினம் மூன்று வேளை தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான் என்று வாசிக்கிறோம் (தானி 6:10). இப்பாடலில் முதல்வரியில் (ஆங்கிலத்தில்) சொல்லியபடி, பரிசுத்தத்தை நாடுவதற்காக நேரம் செலவிட நாம் ஏவப்படுகிறோம்.

இங்கிலாந்து நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த வில்லியம் டன் லாங்ஸ்டார்ப் (William Dunn Longstaff) என்பவர் ஒரு சிறந்த பக்தன். ஒழுங்காக ஆலய ஆராதனைக்குச் செல்பவர். ஒவ்வொரு ஆராதனையிலும் ஆற்றப்படும் அருளுரையை மிகவும் நுட்பமாகக் கவனித்து, வீட்டுக்கு வந்தவுடன் அதைக்குறித்து வெகுநேரம் சிந்தனை செய்வார். ஒரு ஓய்வுநாள் காலை ஆராதனையில், 'நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருப்பீர்களாக' (லேவி 11:45) என்னும் வசனத்தில் செய்யப்பட்ட ஓர் அரிய அருளுரையைக் கேட்டு, வெகு நேரம் அதைக்குறித்துச் சிந்தனை செய்யவே, 'தூய்மை பெற நாடு' என்னும் செய்யுள் அவர் மனதில் உருவாயிற்று. உடனே அவர் அதை எழுதிவைத்தார். இதை அவர் ஓர் பாடலாகக் கருதாமல், ஒரு சாதாரணச் செய்யுளாகவே கருதினார். பின்னர், இச்செய்யுள் சில கிறிஸ்தவ பத்திரிகைகளில் பிரசுரமானது. மற்றவர்களும் இதை ஒரு முக்கியமான செய்யுளாகக் கருதவில்லை. அமெரிக்காவில் ட்ரெமான்ட்-டெம்பிள் (Tremont Temple) என்னுமிடத்திலுள்ள ஆலயத்தில் ஜியார்ஜ ஸ்டெபின்ஸ் (George Stebbins) என்னும் சங்கீத நிபுணர் பாடகர் தலைவராயிருந்தார். இவர் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கிறிஸ்தவச் செய்யுள்களை வெட்டி எடுத்துச் சேர்த்து வைப்பது வழக்கம். லாங்ஸ்டார்ப் எழுதிய 'தூய்மை பெற நாடு' என்னும் செய்யுளும் அவரது சேகரிப்பில் இருந்தது.

1890'ம் ஆண்டு, ஸ்டெபின்ஸ் இந்தியாவுக்கு வந்து, பல எழுப்புதல் கூட்டங்களில் கலந்துகொண்டார். ஒருமுறை 'பரிசுத்தமாக்குதல்' என்னும் பொருளில் அமைந்த ஒரு பாடல் தேவைப் பட்டது. இப்பொருளில் லாங்ஸ்டார்ப் எழுதிய செய்யுள் தன்னிடத்தில் இருப்பது ஞாபகத்துக்கு வரவே, அதைத் தேடி எடுத்து, அதற்கேற்ற ஓர் ராகம் அமைத்தார். இது பலராலும் போற்றப்பட்டு, பல இடங்களுக்கும் பரவியது. ஆகவே இப்பாடல் ஓர் ஆங்கிலேயரால் எழுதப்பட்டு, ஓர் அமெரிக்கரால் ராகம் அமைக்கப்பட்டு, இந்தியாவில்தான் முதன் முதலாகப் பாடப்பட்டது.

இப்பாடலை எழுதிய வில்லியம் டன் லாங்ஸ் டார்ப் என்பவரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய அதிகமான குறிப்புகள் எதுவும் இல்லை. அவர் 1822ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். அவர் ஒரு சிறந்த கிறிஸ்தவ பக்தன். ஆழ்ந்த ஆத்தும அனுபவம் உள்ளவர். இந்த ஒரே பாடல் மூலம் அவர் புகழ் ஓங்கிற்று. அவர் 1891'ம் ஆண்டு, தமது 72வது வயதில் மறுமைக்குட்பட்டார்.

## நவம்பர் மாத தலைப்பு

## சகல பரிசுத்தவான்கள்

## *All Saints*

## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – அக்டோபர் 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 3 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | Church Day & Choir Day - தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 5 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 7 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 10 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 12 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் – முசாபா |
| 14 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 18 | வெள்ளி | 8.00 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 20 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 21 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 25 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 28 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 31 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |

# ஆராதனை பாடல்கள் – அக்டோபர் 2025

| 03-10-25 | |
|---|---|
| பாமாலை – 15 | அலங்கார வாசலாலே |
| பாமாலை – 172 | சபையின் அஸ்திபாரம் |
| கீர்த்தனை – 302 & 303 | ஆனந்தமே! ஜெயா! ஜெயா!<br>எந்நாளுமே துதிப்பாய் |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **10-10-25** | |
| பாமாலை – 6 | என் நெஞ்சமே, நீ மோட்சத்தை |
| பாமாலை – 188 | உம்மாலேதான், என் இயேசுவே |
| கீர்த்தனை – 83 & 99 | இயேசுவின் நாமமே திருநாமம்<br>ஆவியை அருளுமே, சுவாமீ |
| பாமாலை – 44 | உன்னதமான கர்த்தரே |
| **17-10-25** | |
| பாமாலை – 11 | மகா அதிசயங்களை |
| பாமாலை – 207 | கர்த்தாவின் தாசரே |
| கீர்த்தனை – 109 & 193 | காலத்தின் அருமையை அறிந்து<br>எல்லாம் இயேசுவே |
| பாமாலை – 142 | பிதாவே, மா தயாபரா |
| **24-10-25** | |
| பாமாலை – 4 | உன்னதரே நீர் மகிமை |
| பாமாலை – 290 | நாங்கள் பாவ பாரத்தால் |
| கீர்த்தனை – 267 & 185 | மறவாதே, மனமே, தேவ சுதனை<br>இயேசு நேசிக்கிறார் |
| கீர்த்தனை – 317 | அனுக்ரக வார்த்தையோடு |
| **31-10-25** | |
| பாமாலை – 22 | தூய, தூய, தூயா! சர்வ வல்ல |
| பாமாலை – 347 | தெய்வ ஆட்டுக்குட்டியே |
| கீர்த்தனை – 127 & 208 | குணப்படு, பாவி தேவ<br>ஏற்றுக்கொண்டருளுமே, தேவா |
| கீர்த்தனை – 2 | திரி முதல் கிருபாசனே, சரணம் |

# திருமறை பாட ஒழுங்குகள் – அக்டோபர் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-10-25 | Church Day | ஆகாய் 2:1-13 | 2 பேதுரு 2:1-10 | யோவான் 10:22-30 | 84 |
| 10-10-25 | மரியாதைக்குரிய முதுமை | ஆதி. 46:28-34 | 1 தீமோ. 5:1-10 | லூக்கா 2:29-407 | 21 |
| 17-10-25 | கிறிஸ்துவின் நற்கந்தம் | எசே. 20:39-44 | 2 கொரி. 2:12-17 | மத்தேயு 5:1-16 | - |
| 24-10-25 | இளையோர்: இன்றைய தலைவர்கள் | தானியேல் 1:8-17 | 1 தீமோ. 4:1-12 | லூக்கா 4:14-24 | 98 |
| 31-10-25 | நேர்மையான சம்பாத்தியம் | 1 இராஜா. 21:1-16 | 1 தீமோ. 6:6-19 | மத்தேயு 19:16-26 | - |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 07-10-25 | நீதிமொழிகள் | 17:15-28 | Tourist Club |
| 14-10-25 | நீதிமொழிகள் | 18:1-12 | Al Wadha |
| 21-10-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 28-10-25 | நீதிமொழிகள் | 18:13-24 | Hamdan |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Leslie Manohar Isaac. W |
| 1 | Mr. | J. Manuel Raj John |
| 2 | Mr. | Manohar Rajapandi |
| 2 | Dr. | Rajakumar Manickam |
| 2 | Mr. | Yesudian Nayagam Eban |
| 3 | Ms. | Gabrilyn Hannah |
| 6 | Mrs. | Sheeba Herlin. S |
| 6 | Mrs. | Victory A |
| 7 | Mr. | Camryn Robert |
| 7 | Master | Kavin Immanuel Arun |
| 8 | Mr. | Ranjith Kumar. J |
| 9 | Mr. | Yuvesh Ray |
| 9 | Master | Fabian Alam |
| 11 | Mrs. | Jebaseeli Idah Hannah |
| 11 | Mrs. | Hepsiba Jeni. M |
| 11 | Mrs. | Sujatha Ruban J |
| 13 | Miss | Diyas Dinesh |
| 14 | Mr. | Abishek Samuel |
| 14 | Mrs. | Esther Pauline Rani |

# HAPPY BIRTHDAY

| Birth Date | Title | Name |
|---|---|---|
| 15 | Master. | Kevin Paul Crishanth |
| 16 | Mrs. | Sheneegah Stanly |
| 20 | Master. | Alston Elvin Paul |
| 20 | Mrs. | Patricia Santhi L |
| 20 | Mr. | Sundar Jebakumar T. |
| 21 | Baby | Berakah Jessy |
| 22 | Master. | Joshua Mahear |
| 22 | Ms. | Niwisha |
| 23 | Mr. | Ramesh Prabahardhas |
| 23 | Master. | Jahziel Brayden |
| 23 | Mrs. | Padma Brin |
| 24 | Mr. | Selvin Franklin N |
| 24 | Ms. | Melki |
| 25 | Mr. | John Beno |
| 28 | Mrs. | Amija Behin |
| 29 | Ms. | Jen Scudd |
| 29 | Master | Benson Immanuel Raj |
| 29 | Mrs. | Lavina Daniel |
| 30 | Miss. | Arlin Sheya |
| 31 | Master | Eion Jayden |
| 31 | Mr. | Edwin |

# HAPPY ANNIVERSARY!

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| **2** | Mr. | Rajesh T |
| **2** | Mr. | Vivin Alfred |
| **19** | Mr. | Edwin |
| **21** | Mr. | Jose Wesly. J |



Teachers' Day Service



Men's Fellowship Service



# ANNIVERSARY

CELEBRATION